(2025-26-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2 )

**SUBJECT CODE** 25 UTL 1C1

**REG.NO:**

# என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி

## பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் – 2025

இளநிலை பட்ட வகுப்புகள் — மதிப்பெண்கள் : 75

அரசு உதவி (கணிப்பொறியியல்/வணிகவியல் மட்டும்) மற்றும்

சுயநிதி (பி.ஏ.தமிழ் இலக்கியம் நீங்கலாக )

முதல் பருவம் — நேரம் : 3 மணி

## பகுதி – 1

### தமிழ்த்தாள் - 1

### பகுதி – அ (10x1=10 மதிப்பெண்கள் )

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத்** தேர்ந்தெடுத்து எழுதுக. **(K1)**

1. யோகத்திலே நிகரற்றவள் என்று பாரதியார் யாரைக் குறிப்பிடுகிறார்?
   அ) தமிழன்னை ஆ) செல்லம்மா இ) கண்ணம்மா ஈ) நிவேதிதா
2. ஜாதி விலங்குகளுக்குப் புதுமுலாம் பூசும் நாள் எது என்று தமிழன்பன் கூறுகிறார்?
   அ) பண்டிகைநாள் ஆ) பிறந்தநாள் இ) தேர்தல் நாள் ஈ) திரையிடும்நாள்
3. சால்பு என்பதன் பொருள் யாது?
   அ) பொறை ஆ) அறம் இ) ஞாலம் ஈ) சான்றாண்மை
4. பள்ளிக்கு என்பதில் இடம் பெற்ற உருபு யாது?
   அ) இரண்டாம்வேற்றுமை ஆ) நான்காம் வேற்றுமை
   இ) ஐந்தாம்வேற்றுமை ஈ) ஆறாம் வேற்றுமை
5. நன்னூலின் ஆசிரியர் யார்?
   அ) இளம்பூரணர் ஆ) தண்டி இ) நாற்கவிராசநம்பி ஈ) பவணந்தியார்

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** **(K2)**

6. அளப்பரிய ஆற்றல்களை வசப்படுத்தும் மந்திரக்கோல் எது?
7. வாழ்க்கை வரலாற்றுத் திறனாய்வு எதற்குப் பயன்படுகிறது?
8. கைக்கிளை என்றால் என்ன?
9. அது, இது எனும் சுட்டுப்பெயருக்குச் சான்று தருக.
10. மணிப்பிரவாளம் என்றால் என்ன?

### பகுதி – ஆ (5 x 5 = 25)

கீழ்க்காணும் வினாக்களுக்கு ஆய்தல்திறன் அடிப்படையில் (**K3-Analysis**) இரண்டு பக்க அளவில் விடையளிக்கவும். **(K3)**

11. அ) இயற்கை எழிலைப் படம் பிடிக்கும் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் உள்ளத்தை உணர்த்துக.

(அல்லது)

ஆ) புத்தகங்கள் என்னவெல்லாம் செய்யுமென ஆசிரியர் வியந்துரைக்கின்றார்? **(த.பி.பா)**

ETHICAL PAPER

12. அ) எவையேனும் இரண்டு பெண்பாற்புலவர்களின் ஆளுமைகள் குறித்தெழுதுக.

(அல்லது)

ஆ) கோவை என்பதன் பொருள் கூறி,அம்பிகாபதிக் கோவையின் சிறப்புகளை விளக்குக.

13. அ) இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

எத்தனையவனக் காசுகள்
ஓ நதியே! உன் மடியில்?

(அல்லது)

ஆ) இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்.

14. அ) வன்தொடர்,மென்தொடர்க் குற்றியலுகரத்தில் வல்லினம் மிகுதலைச் சான்றுடன் தருக.

(அல்லது)

ஆ) வல்லினம் மிகா இடங்களைச் சான்றுடன் எழுதுக.

15. அ) நன்னூலின் அமைப்பை எழுதுக.

(அல்லது)

ஆ) சிறுகதை எவ்வாறமைய வேண்டும்? விளக்குக.

## பகுதி – இ (**5 x 8 = 40**)

கீழ்க்காணும் வினாக்களுக்கு ஆய்தல்திறன் அடிப்படையில்(**K4-Analysis**) நான்கு பக்க அளவில் விடையளிக்கவும். **(K4 (Or) K5)**

16. அ) மாணவனுக்கு நாமக்கல் கவிஞர் கூறும் நல்லறங்களைத் தெளிவுபடுத்துக.

(அல்லது)

ஆ) அறிவியல் ஆன்மீகம் படைக்கும் மயில்சாமி அண்ணாதுரை கவிதையை ஆராய்க.

17. அ) சொந்த மண்ணை நேசிக்கும் காசி ஆனந்தனின் மன உணர்வுகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) சங்கப் பெண்புலவர்களின் சான்றாண்மையைச் சிறப்பித்தெழுதுக.

18. அ) நீதி இலக்கியங்கள் வெளிப்படுத்தும் கல்விச்சிந்தனைகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

ஆ) பத்தொன்பதாம் நூற்றாண்டில் உரைநடைப் பணி செய்த சான்றோரை வியந்தெழுதுக.

19. அ) விளையாட்டு விபரீதமாகும் என உணர்த்தும் குளத்தங்கரை அரசமரம் சிறுகதையைத் திறனாய்க.

(அல்லது)

ஆ) யானைகளின் வாழிடங்களை அழிக்கும் மனிதர்களைக் காப்பான் சிறுகதை எங்ஙனம் படம்பிடிக்கின்றது?

20. அ) மனிதநேய மாண்பு எனும் தலைப்பில் சிறுகதை ஒன்று எழுதுக.

(அல்லது)

ஆ) பகுத்துண்போம் பசியாற்றுவோம் என்ற தலைப்பில் கவிதை ஒன்று எழுதுக.



******